**லக்கல - பள்ளேகம பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 08 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 17 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 27 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லக்கல - பள்ளேகம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்களின் கூட்டுத்தொகைக்கும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதிக்கும் இடையே ரூபா 4,093,098 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (ii) | காணி மற்றும் கட்டிட கணக்கில் ரூபா 3,315,257 தொகை வரவு வைக்கப்பட்டதன் காரணமாக காணி மற்றும் கட்டிட கணக்கும், மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கும் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டுக் குறைபாடுகளை சரிசெய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,313,849 பெறுமதியுடைய பொருட்கள் கணக்கீடு செய்யப்படவில்லை. | கணக்கீட்டுக் குறைபாடுகளை சரிசெய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டு முதல் உரிய பிரகாரம் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | 2018 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட பொருட்கள் விநியோகித்தலாக கணக்கீடு செய்யப்படவில்லை. | கணக்கீட்டுக் குறைபாடுகளை சரிசெய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டு முதல் உரிய பிரகாரம் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 126,113 பெறுமதியான களஞ்சியப் பொருட்கள் இறுதியிருப்பிற்கு கொண்டுவரப்படவில்லை. | கணக்கீட்டுக் குறைபாடுகளை சரிசெய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (vi) | இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | கணக்கீட்டுக் குறைபாடுகளை சரிசெய்யப்பட வேண்டும். | இந்த சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |
| (vii) | மீளாய்வாண்டில் இரண்டு வேலைகளுக்குரியதாக நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 130,000 பெறுமதியொன்று நிறுத்தி வைத்தலாக கணக்கீடு செய்யப்படவில்லை. | கணக்கீட்டுக் குறைபாடுகளை சரிசெய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (viii) | மீளாய்வாண்டில் முற்பணக் கணக்கில் ரூபா 156,000 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டுக் குறைபாடுகளை சரிசெய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (ix) | மீளாய்வாண்டின் போது சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 2,182,503 பெறுமதியான ஹத்தொட்டஅமுண சந்தைக் கட்டிடம் கணக்கீடு செய்யப்படவில்லை. | கணக்கீட்டுக் குறைபாடுகளை சரிசெய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (x) | களுகங்கை செயற்திட்டத்தில் (நீர்த் தேக்கம்) அமிழ்ந்துள்ள கடைகள், பொதுச் சந்தை, முன்பள்ளி பாடசாலைக் கட்டிடம், கழிவுப் பொருள் தளம் மற்றும் பொது நூலகம் | நிலையான சொத்துப் பதிவேடு உரிய பிரகாரம் பேணிச்செல்லப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | என்பவற்றை உள்ளடக்கிய கட்டிடங்களின் பெறுமதி கணக்குளில் இருந்து அகற்றப்படவில்லை. | | |
| (xi) | 2018 ஆம் ஆண்டின் திசெம்பர் 29 ஆந் திகதி பிரதேச சபைக்குக் கிடைத்த 05 பொருட்களின் பெறுமதியான ரூபா 599,000 தொகை கணக்ககளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது. | கணக்கீட்டுக் குறைபாடுகளை சரிசெய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |

**(ஆ)** **இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 8,805,934 கூட்டுத்தொகையான 09 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய உபயோகப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 3,841,871 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | கணக்குகள் சரிசெய்யப்பட வேண்டும். | தொடர்ந்தும் முன்னைய ஆண்டின் மீதிகளுடன் இணக்கஞ் செய்து இந்த மீதி சரிசெய்யப்படும். |
| (ii) | ஏனைய வரமானப் பதிவேட்டில் கறிப்பிடப்பட்ட வருமானபாய்சச்லுக்கும் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதிக்குமிடையே ரூபா 57,614 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | கணக்குகள் சரிசெய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியாக பிரதேச சபை பாதிவேடுகளைத் தயாரித்து வருமானத் தலைப்பை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொங்கல் கணக்கின் மீதி ரூபா 1,836,420 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக ரூபா 1,719,801 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்குகளில் பிழையாக இடம்பெற்ற சீராக்கங்களைச் செய்து தொங்கல் கணக்கு அகற்றப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |

**(ஈ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | பெறவேண்டிய கணக்குகள் | | |
| (i) | பல வருட காலமாக தொடர்ச்சியாகக் காணப்படுகின்ற 3 நிலுவை மீதி கூட்டுமொத்தமாக ரூபா 160,724 காணப்பட்டது. | ஏனைய பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை ஏக்கர் வரி மீதியை பதிவழிப்பதற்கும் ஏனைய மீதிகளை ஆராய்ந்து கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | செலுத்த வேண்டிய கணக்குகள் | | |
| | பல வருட காலமாக தொடர்ச்சியாக கொண்டுவரப்படுகின்ற செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,050,729 ஆகும். | செலுத்த வேண்டிய மீதி தீர்க்கப்பட வேண்டும். | செலுத்த வேண்டிய ஓய்வூதிய மீதியை செலுத்தித் தீர்ப்பதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிப்பதற்கும் ஏனைய மீதிகள் தொடர்பாக கண்டறிந்து தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

**(உ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 17,099,485 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதி கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 அம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 24 அம் பிரிவு | வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இனங்காணப்பட்ட வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2) | 2015, 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 13 சந்தர்ப்பங்களின் போது 13 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படவில்லை. | வழங்கப்பட்ட உப கட்டுநிதியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |
| (இ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | விதி 99 | 2018 ஆம் ஆண்டில் 04 சந்தர்ப்பங்களில் தீர்க்கப்படாத கொடுப்பணவு உறுதிச் சீட்டுக்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | சரியான பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட உறுதிச் சீட்டுக்களுக்காக மாத்திரம் கொடுப்பணவு செய்யப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |
| (ii) | விதி 217 | சபைக்குச் சொந்தமான மற்றும் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற சகல காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ். 46 படிவத்தின் பிரகாரம் பதிவேடொன்று நாளதுவரையாகப் பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. | பீ.எஸ். 46 படிவத்தின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடொன்று பேணிச்செல்லப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |
| (ஈ) | 2019 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை. | கைவிரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரம் மூலம் வருகை மற்றும் வெளிச்செல்லுகை உறுதிப்படுத்தப்படவில்லை. | கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் வருகை வெளிச் செல்லுகை உறுதிப்படுத்தப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |
| (உ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை. | ஒவ்வொரு 12 மாதங்களுக்கும் அல்லது 25,000 கிலோமீற்றர் ஓடியதன் பின்னர் வாகனங்களுக்கு எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான 04 வாகனங்களுக்கு எரிபொருள் எரிவுப் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவுப் பரிசோதனையொன்று உரிய காலத்தின் போது மேற்கொள்ளப்பட வேண்டும். | விரைவாக எரிபொருள் எரிவுப் பரிசோதனையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.4.2 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் 1 இற்குரிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையிலிருந்து விடுவிப்பதற்காக 10 பயிற்சி செயலமர்வுகளுக்கு பங்குபற்றுவதற்காக பதில்கடமை சபை செயலாளருக்கு பிரயாணச் செலவு மற்றும் இணைந்த படியாக ரூபா 10,820 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பிரயாணச் செலவினம் மற்றும் இணைந்த படிகள் சரியாக உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் செலுத்தப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 659,500 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 74,906 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டு நடைமுறைக் கணக்குகளில் முறையே ரூபா 114,950 மற்றும் ரூபா 220 தொகைகள் 2012 ஆம் ஆண்டு முதல் எந்தவித கொடுக்கல் வாங்கல்களும் இன்றி பேணிச் செல்லப்பட்டிருந்தது. | செயற்பாடுள்ள கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 15,260 | 58,900 | 43,808 | 1,223,353 | 220,260 | 22,000 | 22,000 | - |
| (ii) | வாடகை | 365,600 | 54,790 | 64,145 | 296,723 | 255,600 | 116,440 | 116,440 | 171,200 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 740,000 | 334,500 | 344,500 | - | 800,000 | 602,200 | 368,200 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,960,000 | 2,607,305 | 1,797,107 | 810,198 | 5,597,750 | 3,051,477 | 2,251,477 | 1,188,334 |
| | மொத்தம் | 5,080,860 | 3,055,495 | 2,249,560 | 2,330,274 | 6,873,610 | 3,792,117 | 2,758,117 | 1,359,534 |

## 2.3.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 06 வருடங்களுக்கு முன்னிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற நிலுவை ஏக்கர் வரியான ரூபா 64,426 ஆக இருந்ததுடன் அந்த மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | இந்த நிலுவைப் பணம் தொடர்பாக சரியான தகவல்களைக் கண்டறிய முடியாமையால் அந்த பணத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.3.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் நிறுவனத்தில் நிலுவைக் கடை வாடகை மற்றும் வீட்டு வாடகை ரூபா 118,940 தொகை அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் டெக்டர் வாடகை ரூபா 177,783 தொகை அறவிடவேண்டியிருந்தது. | நிலுவை மீதி அறவிடப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

### 2.3.4 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறவேண்டிய நீர் இணைப்புக் கட்டணம் ரூபா 231,897 தொகையான மீதி பல வருட காலமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |
| (ஆ) | களுகங்கை செயற்திட்டத்தினால் சில அரசாங்க நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு சபை அதிகாரப் பிரதேசத்திலிருந்து விலகிச் செல்வதுடன் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை நீர் கட்டணம் ரூபா 630,342 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 528,100 தொகை அரசாங்க நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை மீதி அறவிடப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 17 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பாக பொருத்தமான பிரகாரம் உபவிதி விதிகள் விதிக்கப்பட வேண்டும். | குறைபாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக ரூபா 909,714 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கழிவுகள் உரிய முகாமைத்துவம் இன்றி அரசாங்கத்தின் காணியொன்றில் நாள்தோறும் போடப்பட்டிருந்தது. | கழிவுப் பொருட்களை அகற்றதல் சரியான முகாமைத்துவத்துடன் மேற்கொள்ளப் பட வேண்டும். | முறையாக கழிவுப் பொருள் முகாமைத்துவம் செய்யப்படும். |
| (ii) | 2018 யூன் 06 ஆம் திகதிய மத்திய மாகாண பிரதம செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் அகற்றுதல் மற்றும் அதற்காக மக்களின் பங்குபற்றலை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் தெரிவு செய்யாது அல்லது வேறு பிரிக்காதிருந்ததுடன் பொலித்தீன் கழிவுப்பொருட்களும் குழிகளில் இடப்பட்டிருந்தது. | நீண்ட கால கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்கு தொடர்புபடுத்தப்பட வேண்டும். | முறையான கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்குரிய செயற்திட்டத்தை ஏற்படுத்துவதற்காக போதியளவான வருமானம் சபையில் காணப்படாதிருந்ததுடன் மகாவலி அதிகார சபையின் மூலம் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு சபையினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கெப் வண்டியொன்று பழுதுபார்ப்பதற்காக 2016 சனவரி மாதத்தின் போது பிரதேச சபைக்கு கிடைத்த ரூபா 134,370 தொகை பழுதுபார்க்கப்பட்ட நிறுவனத்துக்கு செலுத்தாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | உரிய பணம் பொருத்தமான பிரகாரம் சபையின் வருமானத்துக்கு எடுக்கப்பட வேண்டும். | இந்த வாகனத்தின் பழுதுபார்த்தல் சரியான பிரகாரம் மேற்காள்ளப்படாமையினால் இந்தப் பணத்தை செலுத்த முடியாது உள்ளது. |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டில் புறநெகும செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ஹக்தொட்ட அமுணபொல கட்டிடம் கேள்வி கோரப்பட்டு பொருத்தமான நபர்களுக்கு வழங்கப்படவில்லை. | பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத சொத்துக்களை அகற்றுவதற்கோ அல்லது பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொருத்தமான பிரகாரம் வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்பும் மூலதன நிகழ்ச்சித்திட்டம் (2016) இன் கீழ் ரூபா 800,000 செலவில் பிடவல சமனல விளையாட்டரங்கின் உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படவில்லை. | பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத சொத்துக்களை அகற்றுவதற்கோ அல்லது பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பூங்காவை பொது மக்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் அபிவிருத்தி செய்யப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் வெற்றிடமும் மிகையும் | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபையின் பதவியணியில் 19 வெற்றிடங்கள் காணப்பட்டன. | புதவியணி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் | பதிலளிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பிரதேச சபையின் முன்னாள் செயலாளர் ஒருவரினால் இலஞ்சம் பெற்றுக்கொண்ட சம்பவம் தொடர்பாக குற்றப்பத்திரிகை தொடுக்கப்பட்டு செயலாளரின் 2018 ஏப்ரல் 23 ஆம் திகதி பதில் கிடைக்கப்பட்டிருந்த போதும் முறையான ஒழுக்காற்று பரிசோதனை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஒழுக்காற்று பரிசோதனைகள் விரைவாக நடத்தப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |
| (இ) | ஊழியர் பிணை<br>------------------------<br>2003 ஏப்ரல் 11 ஆம் திகதிய சீபீசீ/சீஎஸ்/06/06/02 ஆம் இலக்க பிரதம செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச சபையின் 04 உத்தியோகத்தர்கள் பிணை பணம் வைத்திருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

------------------------------------------------------------

### 3.4.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படாமை

------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமாக காணப்படுகின்ற காணி, கட்டிடங்கள், வாகனங்கள், இயந்திர உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாட பொருட்களை உள்ளடக்கிய சொத்துக்களை பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பாக சொத்துப் பதிவேடு பேணிச்செல்லப்பட வேண்டும். | சபைக்குரிய சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் தொடர்பான தகவல்கள் பூரணப்படுத்தப்பட்டதுடன் சொத்துக்களை பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4.2 சொத்துக்களில் இருந்து கிடைக்கவேண்டிய வருமானம் பெறப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புற நெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 2,182,502 தொகையான உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட லக்கல - பல்லேகல வாராந்த சந்தைக் கட்டடம் முறையான பிரகாரம் பயன்படுத்தி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரிய கட்டிடம் சபையின் வருமானத்தை உழைப்பதற்கான நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

### 3.4.3 கையேற்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மகாவலி அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து கிடைத்துள்ள பிரதேச சபை அலுவலகக் கட்டிடம் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பொருத்தமான பிரகாரம் உரிய சொத்துக்கள் மற்றும் கட்டிடங்களை சபைக்கு கையேற்பதற்கும் சொத்துப் பதிவேடுகளில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கட்டிடத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை சீரமைத்ததன் பின்னர் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற மயான நிலங்கள், பொது நூலகங்கள் மற்றும் சனசமூக கட்டிடங்கள் என்பன அமைந்துள்ள காணிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பொருத்தமான பிரகாரம் உரிய சொத்துக்கள் மற்றும் கட்டிடங்களை சபைக்கு கையேற்பதற்கும் சொத்துப் பதிவேடுகளில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கட்டிடம் அமைந்துள்ள காணியை சபைக்கு கையேற்பதற்கு மஹாவலி அதிகார சபையுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. |
| (இ) | சபை பயன்படுத்துகின்ற 07 வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாகனங்கள் சபைக்கு கையளிக்கப்பட வேண்டும். | இந்த வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | DM 20 KW மின்சார மின்பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் புளக்கல் செய்யும் இயந்திரம் பல வருட காலத்திலிருந்து பயன்பாட்டுக்கு எடுக்கப்படவில்லை. | பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத சொத்துக்களை அகற்றுவதற்கு அல்லது பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த இயந்திரங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்காக மதிப்பீடு பெற்றுக் கொள்வதற்கு விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதுடன் மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் பின்னர் ஏலத்தில் விற்பனை செய்யப்படும். |
| (ஆ) | உள்ளூராட்சி திணைக்களம் சபைக்கு வழங்கியிருந்த ரூபா 7,967,144 பெறுமதியான வீதி செப்பனிடுகை இயந்திரம் 2017 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டுக்கு எடுக்கப்படவில்லை. | பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டுக்கு எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |
| (இ) | சபைக்கு சொந்தமான இரண்டு வாகனங்கள் நீண்ட காலமாக விளைவற்று காணப்பட்டது. | வாகனங்களை பொருத்தமான பிரகாரம் பழுதுபார்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

### 3.4.5 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 02 கெப் வண்டிகளுக்காக வருடாந்த வருமான அனுமதிப் பத்திரம் பெறப்படவில்லை. | வாகன வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். | வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விசேட பொருளாதார கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தென்னை மரங்கள் மற்றும் பப்பாசிக் கன்றுகளைப் பகிர்ந்தளிப்பதற்காக 154 நபர்களுக்கு 10 தென்னம் பிள்ளைகளும், 24 பப்பாசிக் கன்றுகள் வீதமும் பகிர்ந்தளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதிலும் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது அநேகமான நபர்களுக்கு 10 பப்பாசிக் கன்றுகளுக்கு குறைவான எண்ணிக்கை மாத்திரமே கிடைத்திருந்தது. பகிர்ந்தளிக்கப்பட்ட கன்றுகள் தரமான நிலைமையில் காணப்படாமையினால் 2500 கன்றுகள் அழிவடைந்திருந்தன. அதனால் இதற்காக செலவிடப்பட்ட ரூபா 251,600 தொகையான பணம் பயனற்றதாகியிருந்தது. | அபிவிருத்தி செயற்திட்ட பிரதேசங்களுக்கு பொருத்தமான பிரகாரம் தெரிவு செய்தல் மற்றும் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் வருடாந்த பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 922,004 தொகையில் கொள்வனவு செய்தல் பெறுகைத் திட்டத்திற்கு புறம்பாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | வருடாந்த பெறுகைத் திட்டத்தை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) வீதி 5(7) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்ட போதும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை எதுவும் விநியோகிக்கப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு உரிய செயற்பாடுகளுடன் நடாத்தப்படல் வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்தம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடத்த வேண்டியிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் 02 குழு கூட்டங்கள் மாத்திரம் நடத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |